# கல்வெட்டுப் பெயர்ச் சொல்லகராதி

முனைவர் சு. சிவா,
இந்தியமொழிகள் மற்றும் இலக்கியத்துறை,
தில்லிப்பல்கலைக் கழகம். தில்லி.

**Orcid ID: 0009-0001-1978-6854.**

**Research Abstract**

This article, titled Kalveṭṭup peyarc collakarāti (*Lexicon of Nouns in Inscriptions),* is based on a study of inscriptions from Kanyakumari district. The Tamil Nadu State Department of Archaeology has published the inscriptions of Kanyakumari in six volumes (Thovalai, Agasteeswaram, Kalkulam, and Vilavancode). A total of 721 inscriptions are found in these volumes.

Kanyakumari inscriptions are also recorded in the Travancore Archaeological Series (T.A.S. Volumes). In addition, the Sempavalam Research Centre, Nagercoil, Kanyakumari district, Tamil Nadu, has identified more than 60 inscriptions. Individual discoveries and the 34 volumes published as the journal *Aavanam* by the Tamil Nadu Archaeological Society also include inscriptions from Kanyakumari district.

Among the inscriptions of Kanyakumari district, the oldest is the Aralvaimozhi inscription of Maran Jadaiyan (c. AD 770), discovered by prof Manonmaniam Sundaram Pillai. More than 800 inscriptions dating from the 8th century CE to the 19th century CE have been found in this region.

Through a lexicon of nouns in inscriptions, it is possible to identify the linguistic features of Tamil inscriptional language in Kanyakumari district from the 8th to the 19th century CE, which will also support literary research. Ancient history can be explored through the study of nouns. The noun forms found in Kanyakumari inscriptions, where both Tamil and Malayalam were in use, serve as valuable resources for the study of linguistic history.

This article is a compilation of a paper presented at a seminar on “Modern Lexicography” held at the Department of Tamil, University of Kerala. The author is preparing to publish a book titled *“Lexicon of Nouns in Inscriptions (with reference to Kanyakumari district data…).”* This article is a concise version of that forthcoming work. It is expected to inspire further research on nouns in inscriptions, adjectival forms (1. one word with multiple meanings; 2. multiple words with a single meaning), and the various forms of nouns.

**ஆய்வுச் சுருக்கம்**

கல்வெட்டுப் பெயர்ச் சொல்லராதி எனும் தலைப்பிலான இக்கட்டுரை, கன்னியாகுமரிமாவட்டக் கல்வெட்டுகளை முன்வைத்து ஆராயப்படுகிறது. தமிழ்நாடு அரசு தொல்லியல்துறை கன்னியாகுமரிக் கல்வெட்டுகளை ஆறு தொகுதிகளாக வெளியிட்டுள்ளது (தோவாளை, அகத்தீசுவரம், கல்குளம், விளவங்கோடு). இத்தொகுதியில் 721 கல்வெட்டுகள் காணப்படுகின்றன.

கன்னியாகுமரிக் கல்வெட்டுகள் திருவிதாங்கூர் கல்வெட்டுத் தொகுதிகளிலும் (T.A.S Volumes) பதிவாகியுள்ளன. இதைத் தவிர கன்னியாகுமரி மாவட்டம் - நாகர்கோவிலை மையமாகக் கொண்டு செயல்படும் செம்பவளம் ஆய்வுத்தளம், 60-க்கும் மேற்பட்ட கன்னியாகுமரிக் கல்வெட்டுக்களைக் கண்டறிந்துள்ளது. தனி நபர் கண்டுப்பிடிப்புகளிலும் தமிழகத் தொல்லியல் கழகம் ஆவணம் என்னும் இதழாக வெளியிட்டுள்ள 34 தொகுதிகளிலும் கன்னியாகுமரி மாவட்டக் கல்வெட்டுகள் உள்ளன.

கன்னியாகுமரி மாவட்டக் கல்வெட்டுகளில் மிகவும் பழமை வாய்ந்தது மனோன்மணியம் சுந்தரம்பிள்ளை கண்டெடுத்த ஆரல்வாய்மொழி மாறன் சடையன் (கி.பி. 770) கல்வெட்டாகும். கி.பி.8 ஆம் நூற்றாண்டு தொடங்கி 19-ஆம் நூற்றாண்டு வரையுள்ள 800-க்கும் மேற்பட்ட கல்வெட்டுகள் இங்குக் கிடைக்கப்பெற்றுள்ளன.

கல்வெட்டுப் பெயர்ச் சொல்லகராதியின் வாயிலாகக் கி.பி.8-ஆம் நூற்றாண்டு தொடங்கி கி. பி. 19-ஆம் நூற்றாண்டு வரையிலான கன்னியாகுமரிமாவட்டத் தமிழ்க் கல்வெட்டு மொழியை இனம்காண முடியும்; இலக்கிய ஆய்வுக்கும் உதவும். பெயர்ச் சொற்களின் வழியாகப் பண்டைய வரலாற்றை ஆராயமுடியும். தமிழ், மலையாளம் ஆகிய இரு மொழிகள் வழங்கும் கன்னியாகுமரி கல்வெட்டுப் பெயர்ச்சொற்கள் மொழியியல் வரலாற்றுக்கு உறுதுணையாக அமையும்.

இக்கட்டுரை, கேரளப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறையில் 'நவீன அகராதியல்' எனும் பொருண்மையில் நடைபெற்ற கருத்தரங்கத்தில் பங்கேற்று வழங்கிய பேச்சின் தொகுப்பாகும். இக்கட்டுரையாளர் கல்வெட்டுப் பெயர்ச்சொல்லகராதி (கன்னியாகுமரி மாவட்டத் தரவுகளை முன்வைத்து...) எனும் தலைப்பில் நூல் வெளியிட உள்ளார். அந்நூலின் சுருங்கிய வடிவமே இக்கட்டுரையாகும். இதன்வழி கல்வெட்டுகளில் பெயர்ச் சொல் குறித்தும் உரிச்சொல் (1.ஒரு சொல்லுக்குப் பல பொருள் 2. பல சொற்களுக்கு ஒரு பொருள்) குறித்தும் பெயர்ச் சொற்களின் பல்வேறு வடிவங்கள் குறித்தும் ஆராய்வதற்கான உந்துதல் ஏற்படலாம்.

**முன் ஆய்வுகளும் அகராதிகளின் மாதிரி வடிவமும்**

கல்வெட்டு அகராதியை முதன் முதலில் உருவாக்கும் பணியைத் தொடங்கியவர் ஆர். வாசுதேவ பொதுவாள் ஆவார். இவர் 1947-இல் உருவாக்கிய ***திருவிதாங்கூர் கல்வெட்டுகளின் அகராதி (*Lexicon of Travancore*)*** பயனுள்ள மற்றும் சுருக்கமானதாகும். இதில் கேரளத்திலுள்ள தமிழ் மற்றும் மலையாளக் கல்வெட்டுச் சொற்கள் இடம்பெற்றுள்ளன. இவ்வகராதி ஆங்கிலம் மற்றும் மலையாளத்தில் அமைந்துள்ளது. தலைச் சொற்களின் ஒலிப்பெயர்ப்பையும் காணலாம்.

தமிழ்நாடுஅரசு தொல்லியல்துறையின் கட்டுப்பாட்டில் இயங்கிவரும் அரசினர் கீழ்த்திசை சுவடிகள் நூலகம் மற்றும் ஆய்வு மையம் இணைந்து தி.நா. சுப்பிரமணியன் எழுதிய (1957) தென்னிந்திய கோயிற் சாசனங்கள் பாகம் - 3 பகுதி - 2 என்னும் நூலில் உள்ள சொல்லகராதிப் பகுதியை, கல்வெட்டுச் சொல்லகராதி என்னும்

நூலாகத் தமிழகத் தொல்லியல்துறை வெளியிட்டுள்ளது. இந்நூல் தமிழ் - தமிழ் என்ற அமைப்பிலும் Phonetic-English என்ற அமைப்பிலும் இருபகுதிகளாகப் பரித்துத் தரப்பட்டுள்ளன. இதை முழுமையடைந்த கல்வெட்டுச் சொல்லகராதியாகக் கருதமுடியாது. கல்வெட்டுச் சொற்களுக்கான மேற்கோள் பாடமோ, சுட்டு நூல் பற்றிய செய்தியோ இல்லை என்பது இவ்வகராதியின் குறையாகும்.

T.V.மகாலிங்கம் எழுதிய ***தென்னிந்திய அரசியல்முறை*** என்ற நூலின் பின்னிணைப்பில் ஒரு சிறு கலைச்சொல்லகராதி உள்ளது. அதில் வருவாய் மற்றும் நிருவாகம் தொடர்பான சொற்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது. இது தமிழ் மொழியில் அமைந்துள்ளது.

சி.கோவிந்தராசன் எழுதி, மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தால் 1987-இல் வெளியிடப்பட்ட ***கல்வெட்டுக் கலைச்சொல் அகரமுதலி*** முக்கியமானதாகும். கி.பி.7-ஆம் நூற்றாண்டு முதல் 12-ஆம் நூற்றாண்டு முடிய உள்ள சொற்களுக்கு அதில் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது. இவ்வகராதி தமிழில் உள்ளது.

சாந்தி சாதனா என்னும் பதிப்பகம் 2002-ஆம் ஆண்டு ***தமிழ்க் கல்வெட்டுச் சொல்லகராதி*** நூலை இரு தொகுதிகளாக வெளியிட்டுள்ளது. அகராதி தமிழ் - தமிழ் என்ற அமைப்பில் உள்ளது. கி.பி. 400 முதல் கி.பி.18-ஆம் நூற்றாண்டு வரையிலான 14,773 சொற்கள் இடம்பெற்றுள்ளன. ஆட்பெயர்கள், இடப்பெயர்கள் தவிர்ந்த அனைத்துச் சொற்களும் இதில் காணப்படுகின்றன. சுமார் 9000 கல்வெட்டுகளின் அடிப்படையில் இவ்வகராதி தயாரிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு சொல்லுக்கும் காலம், மேற்கோள், சுட்டுநூல் சேர்க்கப்பட்டுள்ளன.

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம், சென்னை 2023-ஆம் ஆண்டு, ***கல்வெட்டுச் சொற்களின் பொருட்புல அடைவு*** (கி.மு. *3* முதல் கி.பி. *13* வரை) எனும் நூலை வெளிக்கொண்டு வந்துள்ளது. இந்நூலின் பதிப்பாசிரியர்கள் பா.ரா. சுப்பிரமணியம், ப.சண்முகம் ஆவர். தமிழ் - தமிழ் ஒலிபெயர்ப்பு - தமிழ் - ஆங்கிலம் எனும் அமைப்பில் நூல் அமைந்துள்ளது. அரசியல், சமயம், சமுதாயம், பண்பாடு, பொருளியல், பொது என்ற பொருண்மையில் கல்வெட்டுப் பொருட் புல அடைவு உள்ளது. நூலின் இறுதிப்பகுதியில் சொல்லடைவும் உள்ளது. இந்நூல் மற்ற அகராதிகளிலிருந்தும் மாறுபட்டதாகும். கல்வெட்டுச் சொற்களையும் தொடர்களையும் அகரவரிசையில் அமைத்துச் சொற்களுக்குப் பொருள் தரும் முறையிலிருந்து விலகி, சொற்களையும் தொடர்களையும் அவை எந்தப் பொருட்புலங்களை (Subject domain) சார்ந்தவை என அறிந்து வகைப்படுத்தித் தரும் முறையைப் பின்பற்றியுள்ளது. கி.மு.3-ஆம் நூற்றாண்டு கல்வெட்டு முதல் கி.பி.1300 முடிய உள்ள கல்வெட்டுக்களை ஆய்வுக்கு உட்படுத்தியுள்ளனர். இவற்றுள் தென்னிந்தியக் கல்வெட்டுகளும் தமிழ்நாடுஅரசு தொல்லியல்துறை வெளியிட்டுள்ள கல்வெட்டுத்தொகுதிகளும் அடங்கும். வேறு எந்தக் கல்வெட்டுத் தொகுதிகளிலும் காணப்படாத புதுமையாகச் சொற்களின் இந்நூலில் காலமும் தரப்பட்டுள்ளன. சொற்களுக்கான இலக்கணக் குறிப்பையும் நூலில் காணலாம். இந்நூலில் உள்ள குறைபாடு என்னவென்றால், ஒரு சொற்களைத் தேடவேண்டும் என்றால் அந்தந்த பொருட்புலங்களுக்குச் சென்று அகரவரிசையில் தேடவேண்டும். ஒவ்வொரு பொருட்புலங்களும் பல்வேறு உட்பிரிவுகளைக் கொண்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

***பழங்குறியீடுகள் குறியீடுகள் கலைக்களஞ்சியம்*** எனும் நூல் 2023-ஆம் ஆண்டு காலச்சுவடு பதிப்பகம் வாயிலாக வெளிவந்துள்ளது. இந்நூலின் ஆசிரியர் சு சிவா. குறியீடுகள் - தமிழ் - தமிழ் ஒலி பெயர்ப்பு -

ஆங்கிலம் - மலையாளம் எனும் அமைப்பில், இக்கலைக் களஞ்சியம் அமைந்துள்ளது. குறியீடுகளின் வழி கல்வெட்டுகள், செப்பேடுகள், ஓலைச்சுவடிகள் வெளிப்படுத்தும் அளவை மற்றும் அளவை அல்லாத சொற்களின் பொருட்களை அறிந்துகொள்ளலாம். 1176 குறியீடுகள் இடம்பெறுள்ளன. குறியீடுகளை அகரவரிசைப்படுத்த முடியாது என்பதால், அவை தரும் பொருளின் அடிப்படையில் எண்ணல், முகத்தல், நிறுத்தல், நீட்டல் அளவைக் குறியீடுகள் மற்றும் அளவை அல்லாத குறியீடுகள் என்ற அமைப்பில் வகைப்படுத்தப்பட்டுள்ளன. இந்நூலின் அமைப்பைப் பொறுத்தவரை ஒரு குறியீட்டிற்குப் பொருள் தேடவேண்டுமென்றால், அனைத்துக் குறியீடுகளையும் பார்க்கவேண்டும். சொற்களின் அகரவரிசைப் போல குறியீடுகளைப் பார்க்கமுடியாது கல்வெட்டுக்களில் இடம்பெறும் எண்ணல், முகத்தல், நிறுத்தல், நீட்டல் அளவைகள் தொடர்பான பொருளை இந்நூலின் வாயிலாக அறியமுடியும்.

**இந்தியாவில் கல்வெட்டுகளும் ஆய்வின் தேவையும்**

இந்தியாவில் ஏறக்குறைய ஒரு இலட்சம் கல்வெட்டுகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. இவற்றுள் அறுபதாயிரம் கல்வெட்டுகள் தமிழ்மொழி சார்ந்த கல்வெட்டுகளாகும். தமிழ்நாட்டில் மட்டும் 25000 கல்வெட்டுகள் கிடைத்துள்ளன என்கின்றனர் ஆய்வாளர்கள். தமிழ்நாடு தொல்லியல்துறை அனைத்துக் கல்வெட்டுகளையும் தொகுத்து வெளியிடும் பணியில் ஈடுபட்டு வருகிறது. இதுவரை 6000 கல்வெட்டுகள் 40 தொகுதிகளாக வெளிவந்துள்ளன. அனைத்துக் கல்வெட்டுகளும் முழுமையாக வெளிவரும்பட்சத்தில், அவை தமிழ்மொழி, வரலாறு, இலக்கிய, சமூக வரலாற்றுக்கு உதவுவதாக அமையும்.

கல்வெட்டுப் பெயர்ச் சொல்லகராதி என்னும் தலைப்பில் கட்டுரை, நூல் எதுவும் வெளிவரவில்லை. இதுவரை 6 கல்வெட்டு அகராதிகள் மட்டுமே வெளிவந்துள்ளன. தமிழ்நாட்டில் கிடைத்துள்ள கல்வெட்டுகளைக் கூட நாம் முழுமையாக ஆராயாமல் இருக்கிறோம் என்பது இவ்வாய்வின் தேவையாக இருக்கிறது.

**பெயர்ச் சொற்கள்**

கல்வெட்டுகளில் வினைச்சொற்களின் பயன்பாட்டைவிட பெயர்ச் சொற்களின் பயன்பாடு அதிகமாகும். இச்சொற்களின் வாயிலாக அக்கால வழக்குகளை நாம் அறிந்துகொள்ளமுடியும். சேரர், சோழர், பாண்டியர், நாயக்கர் எனப் பல அரசர்கள் ஆண்ட பகுதி கன்னியாகுமரி மாவட்டம் என்பதும் அவர்கள் கருத்தும் அவ்வரசர் காலத்தில் வாழ்ந்த மக்களின் கருத்துகளும் கல்வெட்டுக்களில் பதிவாகியுள்ளன. அவற்றுள் சில சொற்கள் மட்டும் இங்குச் சொல், பொருள், வருமிடம், கன்னியாகுமரிக் கல்வெட்டுத் தொகுதி மற்றும் தொடர் எண் என்ற அடிப்படையில் தரப்படுகின்றன.

அடைக்காய் - பாக்கு; ''இலையமுது 50 அடைக்காய் 25...'' 5/1969/78:21.

அடைஓலை -குத்தகை ஆவணம்; ''சீகாரியம் அடை ஓலைப்படி உண்டான கடமையுமிறுத்து...'' 5/1969/33:64.

இராச்சரம் - அரசாங்க வரி; ''இராச்சரத்துக்கு கடமைக்கு ஆராய்ச்சியார்க்கு...''5/1969/57:19

இலையமுது - வெற்றிலை; இலையமுது 50 அடைக்காய் 25...'' 5/1969/78:21.

குறடு - திண்ணை; இந்த மகாமண்டப குறடு ஆரை சாத்தாங்கட்டி...'' 5/1969/76:13.

சாரிப்பு - செலவு; ''கோவிலில் திருப்பணி சாரிப்புக்கு அணைஞ்ச பெருமாள்...'' 5/1969/9:3.

சோராஒற்றி - மீளாத நில அடைமானம்; ''விழுப்பரையர் முதல் பேரோடு சோராஒற்றி கொண்ட மனை ஒன்றும்...'' 5/1969/87:34.

துண்டம் - சிறிய பரப்பிலான வயல் பகுதி; ''கிழ் எல்கை மாவின் துண்டத்துக்கு மேற்கு எல்கை...'' 5/1969/32:56-57.

நத்தக்கால் - வயல் சார்ந்த இடம்; ''நத்தமும் நத்தக்காலும் தோட்டமும் தோட்டக்காலும்...'' 5/1969/66:12.

**மற்றுமொரு பார்வையில் கல்வெட்டுப் பெயர்ச்சொற்கள்**

பழங்காலத் தமிழ்க் கல்வியில் இலக்கியம், இலக்கணம், நிகண்டு என்பவை முக்கியமானதாகும். நிகண்டு படிப்பதால் இலக்கிய இலக்கணப் பயிற்சி எளிதானதாகும். பாடல் வடிவில் அமைந்த சொற்பொருள் விளக்க நூல்களே நிகண்டுகள். ஒரு சொல்லுக்குரிய பல்வேறு பொருள்களைக் கண்டுபிடித்துத் தருவது இதில் முக்கியமானதாகும். தமிழில் பொது ஆண்டு பின் 8-ஆம் நூற்றாண்டு தொடங்கி 20க்கும் மேற்பட்ட நிகண்டுகள் வெளிவந்துள்ளன. நிகண்டு நூலை உரிச்சொல், உரிச்சொல் பனுவல் ஆகிய பெயர்களில் தமிழில் அழைத்தனர். இதற்கான குறிப்பை நன்நூலில் (460) காணலாம்.

கல்வெட்டுப்பெயர்ச் சொற்களில், ஒரு சொல்லுக்குப் பல பொருளையும் பல பொருள்களுக்கு ஒரு சொல்லும் என்ற அடிப்படையில் பல சொற்களைக் காணமுடிகின்றன. கல்வெட்டுகளில் இடம்பெறும் பெயர்ச் சொற்களை உரிச்சொல் பார்வையில் அணுகி எந்தவொரு ஆய்வும் நடைபெறவில்லை எனத் தெரிகிறது. உரிச்சொற்கள் அமைப்புமுறையில் காணப்படும் பெயர்ச்சொற்களில் சில மட்டும் இங்கு இரு தலைப்புகளில் தொகுத்துக் கொடுக்கப்படுகின்றன.

**ஒரு சொல் பல பொருள்**

அகம் - உட்பகுதி; "தானமாக அக வயலில் விட்ட நிலம் ஒரு மாவும்..." (5/1969/11:2).

அகம் - உள்ளடங்குகை; "பகல் 5க்கு மேல் 7க்கு அகம்...'' (1/1968/24: 14)

அஞ்சாலி - எழுத்துமூலமான சம்மதம்; ''அடுத்த பசான முதலுக்கு அஞ்சாலி எழுதிக்கொடுத்து...'' 5/1969/82:10.

அஞ்சாலி - ஒரு நில வரி; ''பாட்டமடைச்சு மேல்வாரம் அஞ்சாலியும் உள்ளிட்டுள்ள பாட்டம்...'' 5/1969/21:52.

அத்தம் - 13-ஆவது நட்சத்திரம்; ''திங்களாட்சையும் அத்தத்தின் நாள் செய்த...'' 5/1969/76:2.

அத்தம் - கை; ''மீட்சை தரவேணும் என்று அத்தம் கெட்டி...''

அத்தம் - பொன்; ''கல் மடத்துக்கு அத்தம் பணம் இரு கலம் பாட்டு...'' 6/2004/589:44.

அத்தம் - வழி; கரடு முரடான வழி; ராசபாதையில் நான் கெட்டி வயித்த மட்டுப்பாவு மடத்துக்கு அத்த நத்தமு மத்தது அடித்து...'' (6/2004/535: 16).

அதிகாரம் - தலைமை அல்லது தனித்துவம் பெற்ற; "மயேசுர பூசைக்கும் அதிகாரம் நெல்லையப்பர் பூசைக்கும்" (5/1969/57: 4).

அதிகாரம் - இறையாண்மை; ஆட்சித்தலைமை உரிமை; ''இக்கோயிலில் அதிகாரம் உடைய பொதுவாண்மார்...'' (2/1968/175: 1).

உத்தரம் - வடக்கு; "குமரிப் பகவதி அம்மன் சன்னதிக்கு உத்தரத்திக்கில் சக்கர தீத்தக்கரை மடதிருப்புறம்...." (6/2004/457: 21).

உத்தரம் - 12-ஆவது நட்சத்திரம்; ''அற்பசி மாதம் 9 தேதி புதனாச்சையும் உத்தரமும் அமரபக்ஷத்து திரையோதெசியும்....." (4/1969/114: 1).

உரு - இறை வடிவச்சிலை; "அணைஞ்ச பெருமாள் சிரம் காக்குமாறு கணக்காகி உரு இரண்டு..." (5/1969/9: 7).

உரு - (மண்பானை) உருவம்; "வேளாமார் பட்டையம் தந்த படிக்கு குசக்கலம் உரு 20..." (5/1969/57: 14).

ஓலை - செய்தி எழுதப் பெற்ற ஓலை. "மணியகாறன் கட்டளையிட்டு ஓலை குடத்த அடிக்கு உண்டான இறையுமிறுத்து...." (5/1969/33: 72).

ஓலை - தானப் பிரமாண ஓலை; "இப்படி சம்மதித்து இந்தத் தானப் பிறமாண ஓலை எழுதிக் குடுத்தேன்..." "(3/1968/301: 23).

ஓலை - வீட்டின் கூரைக்குரிய ஓலை; "மடமும் ஓலை கெட்டிவிச்சு இடிஞ்ச மண்ணும் வைப்பிச்சு..." (5/1969/34: 146).

கணக்கு - வரவு செலவு கணக்கு விவரம்; ''கல்லிலும் செம்பிலும் வெட்டுவிச்சு கணக்கு எழுதிப் போதும்படி...'' 5/1969/53:8.

கணக்கு - கணக்கன்; '' மேற்படி ஊரில் கணக்கு ஆண்டார் மாரயக்குட்டி...'' 5/1969/37:5.

கணக்கு - செலவு; "பாப்பி அம்மையார் மகள் கணக்கு சதா சேவை..." (5/1969/6: 4).

களம் - வெற்று நிலப்பகுதி; "எற்பேற்பட்டதும் கதிற்களமாக விட்ட களத்துக்கு எல்கையாவது...." (1/1968/22: 24).

களம் - நெற்களம்; ''நந்தவனப் பணிவிடைக்கு நெல் களமும் மாதம் ஒன்றுக்கு...'' (6/2004/530: 46).

கன்னி - தென் மேற்குத் திசை; "நயினார் கோவில் கன்னியில் பிள்ளையாரும்..." (5/1969/88: 5).

கன்னி - கன்னியின் உருவத்தைக் குறியீடாக உடைய இராசி; ''கன்னியில் வியாழன் நின்ற மிருச்சிக ஞாயிற்று...'' (2/1968/147: 2).

கால் - வாய்க்கால்; "பேய் கொட்டில் நீர் பாய்கிற காலுக்கு வடக்கும் ..." (5/1969/).

கால் - அளவுப்பெயர் (¼); "லெமு கல நெல்லும் காற்காசுங் கடமை..."(5/1969/16: 14).

கோட்டை - 21 மரக்கால் கொண்ட ஒரு முகத்தல் அளவை; "நந்தவனத்துக்கும் கோட்டை ஒன்றும் நீராகரத்துக்கு கோட்டை ஒன்றும்..." (5/1969/24: 5).

கோட்டை - பாதுகாப்புடைய அரண்; "கோட்டந்தளத்துத் தென் சரிவும் கோட்டையும்....." (5/1969/36: 11).

செம்பு - தாமிர உலோகம் (செம்பு பட்டையத்தில் எழுதப்படும் எழுத்து. முற்காலத்தில் ஒரு செய்தி ஒலை, கல்வெட்டு, செம்பு உள்ளிட்ட பல்வேறு வடிவங்களில் பதிவு செய்யப்பட்டுள்ளது); "சந்ததிப் பிறவேசமே கல்லிலும் செம்பிலும் வெட்டிவிச்சு கணக்கும் எழுதி...." (5/1969/51: 8).

செம்பு - குறுகிய கழுத்தும் உருண்டை வடிவக் கீழ்ப்பகுதியையும் கொண்ட பாத்திரம் (1/1968/27: 43).

தானம் - நன்கொடை; "தானமாக நாம் விட்டுத் தந்த நிலம்..." (5/1969/61: 16).

தானம் - கோவில்; "மடங்களிலும் தானங்களிலும் உள்ள சீபண்டாரக் காரியம் செய்வார்கள்...." (5/1969/82: 15).

தானம் - நீர் நிலைகளில் குளிப்பது; ''இந்த தர்மத்தைப் பரிபாலனம் பண்ணினவர்கள் கெங்கைகரையிலே அச்சுவமேதயாகம் பண்ணிய பலமும் கெங்காத்தானம் பண்ணின பலமும் பெறுவாராகவும்...'' (6/2004/490: 78-79).

தேசம் - இடம்; ''திருமடத்தில் பூசைக்கு உள்ள தேசம் அஞ்சினான் புகலிடம்'' 5/1969/20;4.

தேசம் - நாடு; ''மேற்படி தேசத்து வாணியன் அருமை மாத்தாண்டச் சோழகன் செக்கு ஒன்றுக்கு...'' 5/1969/48:3.

பத்து - வயல்; ''கூடு வயல் உள்ளிட்ட பத்தில் உண்ணியூர் கொற்றவன்...'' 5/1969/84:16.

பத்து -ஒன்பது என்ற எண்ணிற்கு அடுத்து வருவது; ''அமுதுக்குத் தந்த அச்சு பத்து...'' 5/1969/15:4.

பலம் - வலிமை; ''தன்மத்தைப் பரிபாலனம் செய்த பேர்கள் அச்சுவமேதயாகஞ் செத்த பலத்தை அடைவாராகவும்...'' 5/1969/38:31.

பலம் - 35 கிராம் கொண்ட அளவு; ''சந்தனம் பலம் நாலும்...'' 5/1969/66;21.

புண்ணியம் - நல்வினைப்பயன்; ''அச்சுவதமேதயாகம் செயித புண்ணியத்திலே போவானாகவும்...'' 5/1969/68:87.

புண்ணியம் - தர்மம்; ''தாழைக்குடி வாச்ச பெருமாள் புண்ணியம்...'' 5/1969/33:23.

பேர் - பெயர்; ''காணியன் விளை என்று பேர் பெத்த விளைக்கு...'' 5/1969/32:49.

பேர் - நபர்; ''கோவிலுக்கும் மடங்களுக்கும் அகுதம் செய்த பேர்கள்...'' 5/1969/21:125.

மண் - நாடு; ''செயதுங்க நாட்டு சங்கர நாராயண வென்று மண்கொண்ட ...'' 5/1969/51:2-3.

மண் - சுண்ணாச்சாந்து; ''மடமும் ஓலையும் கெட்டிவிச்சு இடிஞ்ச மண்ணும் வைப்பிச்சு...'' 5/1969/34:147.

முதல் - தொடக்கமாக இருப்பது; ''அலத்துறை ஆறில் முதல் பரம்பு அணை பஞ்ச சரவணை பெருமாள்...'' 5/1969/21:76.

முதல் - மூலதனம்; ''நந்தவனமும் பேணிவிச்சு மிகுந்த முதலில் மடமும் நடத்தி..'' 5/1969/34:150-151.

முதல் - முதலியோர்; ''விழுபரையர் முதல் பேரோடு சோரா ஒற்றி கொண்ட...'' 5/1969/87:34.

மேல் - மேல் பகுதி; "தெற்கடைந்த நெடுங்கண்ணும் மேலைத் தடியும்...." (5/1969/12: 2).

மேல் - இணை (சகாப்தம் ஆண்டுக்கு இணையான கொல்லம் ஆண்டு); "சகாப்தம் 1628ந் மேல் செல்லானின்ற கொல்லம்..." (5/1969/37: 1).

**பல சொற்கள் ஒரு பொருள்**

அரி - அரிசி; "பூசைக்குள்ள நாள் ஒன்றுக்கு அரி உரி..." (5/1969/74: 13).

அரிசி - "செலுத்தக்கடவ அரிசி அறு நாழிக்கு..." (5/1969/10: 1)

ஆட்டை - ஆண்டு; ''பூராடம் ஆட்டைப் பிறந்த நாளுக்கு ...'' 5/1969/37:11

ஆண்டு -"கொல்லம் தோன்றி இரு நூற்றுத் தொண்ணூற்றொன்பதமாண்டு மிதுனத்தில்" (5/1969/16: 1).

திருவிளா - திருவிழா; "எட்டாந் திருவிளாவுக்கு மாலை கெட்டி..." (5/1969/21: 40).

உத்ஸவம் - திருவிழா; ''பிற்றை நாள் உத்ஸவ மெழுந்தருளுகைக்கு...'' (4/1969/38: B:5).

குடிபதி - குடிமக்கள்; ''சுந்தரியமாய் உள்ள குடிபதிக்கும் மேற்படி ஆண்டு...'' 5/1969/5-6

குடியள் - குடிமக்கள்: 5/1969/33:50.

எண் - எட்டு; ''பூசை சோறு எண்ணாழி செய்யும்..'' 5/1969/48:4.

நாலணை - எட்டு; '' திருமாலை நாலணையும் சந்தனம் பலம் நாலும்...''5/1969/66:21.

படுகல் - கல் படுக்கை; ''இடையன் தூணியில் இட்டுத்தந்த படுகல்...''5/1969/34:53.

படுகலம் - கல் படுக்கை; ''வயலில் படுகலமிட்டுத்தந்த...'' 5/1969/34:144.

**ஒரே பொருளில் வரும் பெயர்ச்சொற்களின் பல்வேறு வடிவங்கள்**

கல்வெட்டுகளில் ஒரே பொருளில் வரும் பெயர்ச் சொற்களின் பல்வேறு வடிவங்களைக் காணமுடியும். சில சொற்களின் மாதிரி கீழே தரப்படுகின்றன. இவை அக்காலத்தைய வழக்காகவும் இருக்கலாம் அல்லது எழுத்துப் பிழையாகவும் இருக்கலாம்.

அகிதம் - இடையூறு: ''யிதுக்கு அகிதம் பண்ணின பேர் கெங்கைக் கரையிலே...'' 5/1969/33:91.

அகுதம் - இடையூறு: ''கோவிலுக்கும் மடங்களுக்கும் அகுதஞ் செய்த பேர்கள்...'' 5/1969/21:125.

அச்சுவமேதயாகம்- உத்தமக் குதிரையின் நெற்றியில் அரசனின் வீரம் முதலியவைகளை வரைந்த பட்டத்தைக் கட்டி ஊர்வலம் செய்வித்துப் பின் யாகம் செய்தல்: ''இத்தன்மத்தை பரிபாலன செய்த பேர்கள் அச்சுவமேதயாகஞ் செய்த பலத்தை...'' 5/1969/38:31.

அச்சுவமேதியாகம் - 5/1969/37:33.

அச்சுவமேதையாகம் - 5/1969/86:20.

அபரபக்கிஷம் - தேய்பிறை நாள் ''சித்திரை மாதம் 13 தேதி நாள் அபரபக்கிஷத்து சத்தமியும்...'' 5/1969/77:1.

அபரபக்ஷம் - 5/1969/88:1.

அமரபக்கிழசம் - 5/1969/78:30

அமரபக்ஷம் - 5/1969/42:4.

அமரபட்சம் - 5/1969/42:4

அஞ்ஞாழி - ஐந்து நாழி அளவு கொள்ளவுகொண்ட ஒரு முகத்தல் அளவை; ''அஞ்ஞாழித் தையிரமுதும்...'' (1/1968/53: 1).

அஞாழி - ஐந்து நாழி, "அமுதுபடிக்கு இருனாழியில் நித்த அமுதுபடி அஞாழியும்..." (1/1968/84: 14).

ஐஞ்ஞாழி - ஐந்து நாழி, "ஒரு கலம் இரு உழக்கு ஐஞ்ஞாழி ஆக ஆண்டு ஒன்றுக்கு.." (1/1968/124: 48).

அமிதம் - இறைவனுக்குப் படைக்கப்படும் உணவு; படையல் சோறு ''ஒமத்தினு அமிதத்தினு அரி இரு நாழி...'' (6/2004/575: 21).

அமிர்து - "நாள் ஒன்றுக்கு நானாழியுரி அமிர்து...." (2/1968/161: 9).

அமுதுபடி - நைவேத்தியங்களை அளிப்பது; "ஆட்டைப் பிறந்த நாளுக்கு அமுதுபடி அரிசி 4 நாழி..." (5/1969/ ).

அமுர்துபடி - "நானாழி யரி அமுர்துபடி செல்வதாகக் கற்பிச்சு...." (2/1968/161: 4).

அல்பசி - ஐப்பசி - பத்தாவது தமிழ் மாதத்தின் பெயர்; ''அல்பசி மாதத்தின் பெயர் 5/1969/9:1.

அல்ப்பசி - "அல்ப்பசி மாதம் 7 தேதி..." (5/1969/9: 1).

அல்ப்பஸி - "கொல்லம் மிஸியனில் அலுவலானா 860ல் அல்ப்பஸி மாதம்..." (6/2004/515: 14).

அல்ப்பிசி - "990 வருஷம் அல்ப்பிசி மாதம்...." 6/2004/450:2

அற்ப்பிசி - "823 வருஷம் அற்ப்பிசி மாதம் சனியாட்சையும்...." (6/2004/510: 3).

அற்பசி - "கொல்லம் 811 வருஷம் அற்பசி மாதம்..." (5/1969/87: 2).

அறைப்பிறை - தானிய சேமிப்புக்கிடங்கு; ''பெருமாள் விட்டுக்கொடுத்த மடத்து அறைப் பிறைக்கு...'' 5/1969/90:23.

அறைப்புரை - 5/1969/87:33.

இராச்சரம் - அரசாங்க வரி; "இராச்சரத்துக்கு கடமைக்கு ஆராய்ச்சியார்க்கு..." (5/1969/90; 58).

இராசகரம் -"நயினார் தாணுமாலையப் பெருமாள் மேல்வாரமும் இராசகரத்துக்கு விட்ட அஞ்சாலியும்..." (5/1969/57: 19).

ஊர்மாவிலீந்த - ஊரின் மொத்த நிலவரியில் பங்கு விழுக்காடு. "அஞ்சாலி மேல்வாரம் ஊர்மாவிலீந்த சில்வரிப் பெருவரிக்கு..." (5/1969/34: 133:134).

ஊர்மரர்பிலீந்த - "அரைக்காணியும் ஊர்மரர்பிலீந்த சில்வரி...." (1/1968/29 A : 8).

ஏகாதெசி - பதினோராந் திதி; "பூறுவபக்கத்து ஏகாதெசியும் திங்களாட்சயும்..." (5/1969/79: 54).

ஏகாதேசி - "அபரபக்கிழத்து ஏகாதெசியும் செவ்வாட்சையும் மூலமும்.." (6/2004/528: 4).

சதாசேவை - நித்திய ஊழியம் (கோவிலுக்கு) "பாப்பி அம்மையார் மகள் கணக்கு சதாசேவை ..." (5/1969/6: 5).

சதாசேர்வை - "பறவக்கரை கரும்பன் சதா சேர்வை..." (2/1968/171: 4-5).

சதாசேருவை - "சிதம்பரம் சாதாசேருவை...'' (1/1968/100: 2).

சாலோகம் - நான்கு பதவிகளுள் கடவுளுடன் ஓரிடத்தில் உரைதல்; ''இந்த தன்மம் பரிபாலனமாக நடப்பிச்ச பேர்கள் சாலோக சாமீப சாயுட்சிய பதத்தை அடைவாராகவும்...'' 5/1969/34:176-178.

சாலோபம் - 5/1969/33:87-89.

சிவந்ராத்திரி - சிவபக்தர்கள்நாள் முழுவதும் விரதம் இருந்து, இரவெல்லாம் கண் விழித்துச் சிவனைப் பல காலம் அர்ச்சனை செய்து மாசி மாதத்து கிருஷ்ண சதுர்த்தியில் கொண்டாடும் மகா சிவராத்திரி; ''சிவந்ராத்திரிக்கு அரசி மரக்கக்காலுக்கு...'' 5/1969/91:84.

சிவனிராத்திரி - 5/1969/57:16.

செய்கடவோலைக்கரணம் - செய்யவேண்டிய கடமையைக் குறிக்கும் எழுத்தோலை;. ''மேட ஞாயிற்று செய்த செய்கடவோலைக் கரணமாவது...'' (4/1969/29: 1).

செய்கலவோலை - ''இச்செய்கலவோலை எழுதினென்...''(3/1969/311: 5).

செயகடவோலைக்கரணம் - ''இருந்தெழுதின செயக்கடவோலைக் கரணமாவது...''(2/1968/194: 4).

செவ்வாட்சை - செவ்வாய்க்கிழமை "அபரபக்கிழசத்து ஏகாதேசியும் செவ்வாட்சையும் மூலமும் சிவயோகமும்.." (6/2004:528: 4-5).

செவ்வாய்க்கிழமை - "தெசமியும் செவ்வாய்க் கிழமையும் பெற்ற பூசத்தினாள்..." (3/1968/255: 3).

செவ்வாயாட்சை - "மார்கழி மாதம் 4 தேதி செவ்வாயாட்சையும் உத்திரத்தி நாட் செயித...." (5/1969/75: 1).

செவாயிக்கிழமை - "921 வருஷம் சித்திர மாதம் 12 தேதி செவாயிக் கிழமைக்குப் பிறந்தமைக்கு...." (4/1969/18: 6)

சேர்ராஒற்றி - மீளாத நில அடைமானம்; "இன்னால் முதல் சேர்ரா ஒற்றியாக அசில் படு கடமையும்...." (5/196/84: 26-27).

சொராஒற்றி - "வாணியங் கோணத்தில் சொரா ஒற்றியாக வாங்கின தடி 2 நிலம்..." (5/1969/42: 36-37).

சோராஒற்றி - விழுப்பரையர் முதல் பேரோடு சோரா ஒற்றி கொண்ட மனை ஒன்றும்..." (5/1969/87: 34).

தன்மகத்தர் - கோவில் நிர்வாகம், சொத்துக்கள், பூசை முறைகள் மற்றும் நிதி நிலைகளைக் கவனித்துக்கொள்ளும் பொறுப்புடையவர். "சூழ்சிவிந்திரத்து சிவதியரில் திருவழுதி உண்மை நம்பியாரென் தன்மகத்தர் அருளானந்த பண்டாரத்துக்கு..." (2/1968/238: 3-4).

தன்ம்மபத்தரவு - "இந்தக் கோயில் காரியமாரற் பேரும் தன்ம்மபத்தரவையும் கூட்டி..." (5/1969/37: 30).

தன்மபற்றா - ''இந்த மடத்துக்கு தன்ம பற்றா நாங்கள் இரண்டு பேரும்...." (5/1969/90: 32).

தன்மபத்தா - "இந்த கோவில் காரியமும் கல்மடத்து காரியமும் தன்மபத்தாவையும் கூடி..." (5/1969/38: 29).

திங்களாட்சை - திங்கள்கிழமை; "பூறுவ பக்கத்து ஏகாதெசியும் திங்களாட்சையும் சாத்தயோகவும்..." (5/1969/79: 54-55).

திங்களாச்ச - திங்கள்கிழமை, "சித்திரை மாதம் 18 சென்ற திங்களாச்சயும் புணற்தம்மு பூறுவபக்ஷத்து ஸ்த்தமியும் கொண்ட நித்தியயோகவும்...." (6/2004/522: 6-7).

திருக்கஞ்சாந்து - திருக்கண் சாத்து; சுவாமியின் விதிப்புறப்பாட்டில் நிவேதனத்திற்கு வைத்திருக்கும் தேங்காய், பழம் முதலியன; மேப்படி திருக்கஞ்சாந்துக்கு கோட்டை 1/2..." (6/2004/452: 10).

திருக்கண்சாத்து - ''பட்டாலியர் தெருவில் கறிக்கடமை மார்களி திருக்கண் சாத்துக்கு...'' (6/2004/452: 23).

திருக்கண்சாற்று - ''திருவுளா திருக்கண் சாற்றுக்கு பணம் 12...'' (2/1968/225: 12-13).

திருப்பள்ளிஎழுச்சி - இறைவனைத் துயிலெழுப்பும் பாசுரங்களைப் பாடி காலை வேளையில் கோவில்களில் நடத்தப்படும் பூசை; இறைவனைத் துயிலெழுப்பும் பாசுரங்கள் அமைந்த பிரபந்தம்; "நயினாருக்கு மேற்படி மாதம் திருப்பள்ளி எழுச்சிக்கும் அபிஷேக கட்டளைக்கும்...." (5/1969/75: 2).

திருப்பள்ளிஎழுச்சை - ''திருக்காத்திகை திருப்பள்ளி எழுச்சை சிவராத்திரி பூசை...." (5/1969/37: 8).

திருப்பள்ளிக்சை - "அய்யன் கோவில் துவாதெசிக்கும் திருப்பள்ளிக்சைக்கும் கோட்டை 2...." (5/1969/34: 66-67).

திருப்பள்ளிச்சை - "ஊர்க்கணக்கு வகக்கு திருப்பள்ளிச்சை சிவனிராத்திரிக்கு..." (5/1969/57: 16).

திருப்பளிச்சைபூசை - "திருப்பளிச்சை பூசைக்கு நாள் ஒன்றுக்கு அரிசி இரு மா..." (5/1969/87: 9).

திருபளிச்சை - "மார்களி மாதம் திருபளிச்சை தன்மபற்றாவுக்கு..." (5/1969/21: 32).

திருமாலைப்பிறம் - தெய்வத்திற்குப் கட்டுவதற்குக் கொடுக்கப்படும் நிலம்; "நயினாருக்கு திருமாலைப் பிறமாக விட்டுக்குடுத்த நிலமாவது..." (5/1969/35: 5-6).

திருமாலைப்புறம் - "குளங்கரையில் மேல் பிறத்தில் திரு நந்தாவனத்துக்கு திருமாலைப் புறமாக விட்டுக்குடுத்த...." (5/1969/49: 6).

தேவகன்மி - இறை (தெய்வம்) தொண்டு புரிவோர்; கோயில் பணியாளர்; கோயிலில் சுவாமிக்குப் பணிவிடை செய்வோர். "நயினார் கோவிலில் தேவகன்மிகளுக்கு இன்னயினார்க்கு அமுதுபடி சாத்துபடி...'' (5/1969/66: 2).

தேவகருமி - ''பொலி நெய் கொண்டு ஊரும் தேவகருமிகளாய் நிற்பாரும் எரிப்பிப்பது...'' (4/1969/128: 15).

தேவர்கன்மி - "இவைச்சுப் பத்தும் தேவர்கன்மிகள் சொன்னிடத்தில் செலுத்தித் திருநந்தா விளக்கு முட்டாமல்...." (2/1968/175: 3).

நெய்வேத்தியம் - இறைவனுக்குப் படைக்கப்படும் நெய் உணவு; "அபிஷேக கட்டளைக்கும் அமுது நெய்வேத்தியத்துக்கும்...." (5/1969/75: 3).

நெய்வீத்தியம் - "உஷா பூசைக்கு நெய்வீத்தியம் வைப்பு...." (1/1968/34: 71-72).

நெய்வேற்றியம் - "காசிலிங்கம் பிறதட்டை சிவலிங்கத்துக்கு நெய்வேற்றியத்துக்கு நெல்..." (4/1969/6:58: 59).

தென்னங்காய் - தேங்காய்; ''தென்னங்காய் இலையமுது 50..'' 5/1969/75:5

தேன்காய் - 5/1969/85:12-13

தேங்காய் - 5/1969/75:5.

**நூலடைவு**

1. அழகேசன்.ஆர்.கே. கல்வெட்டுக்கள் காட்டும் கலைச்சொற்கள் (சோழர் காலம்) 2004, சென்னை

2. வாசுதேவ பொதுவாள்.ஆர்; 2018; திருவிதாங்கூர் கல்வெட்டுகளின் அகராதி (*Lexicon of Travancore Inscriptions)*, திருவனந்தபுரம்

3. சண்முகம்பிள்ளை.மு.1982, *நிகண்டுச்சொற்பொருட் கோவை*, மதுரை காமராசர் பல்கலைக்கழகம்.

4. சுப்பிரமணியன்.தி.நா;1957; கல்வெட்டுச் சொல்லகராதி; தமிழகத் தொல்லியல் கழகம், சென்னை.

5. கோவிந்தராசன்.சி; 1987; கல்வெட்டுச் சொல் அகரமுதலி; மதுரை காமராசர் பல்கலைக்கழகம்.

6. சாந்தி சாதனா; 2002, 2003; தமிழ்க் கல்வெட்டுச் சொல்லகராதி, சென்னை - 600028.

7. காசினாதன்.நடன. கன்னியாகுமரி மாவட்டக் கல்வெட்டுகள் (1-3 தொகுதிகள்); தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை, சென்னை.

8. நாகசாமி.இரா. கன்னியாகுமரி மாவட்டக் கல்வெட்டுகள் (4-5 தொகுதிகள்); தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை, சென்னை.

9. சீதாராம் குருமூர்த்தி. கன்னியாகுமரி மாவட்டக் கல்வெட்டுகள் (6 -ஆம் தொகுதி); தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை, சென்னை.

10. பதிப்பாசிரியர் குழு, ஆவணம் (தொகுதிகள் 1-34) - தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர்.

11. Editors Team, Travancore Archaeological series (1-9), Thiruvananathapuram.